செய்தி வெளியீடு எண் : 720 நாள் : 16.04.2023

## செய்தி வெளியீடு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளுக்கிடையேயான, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளுக்கிடையேயான, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மண்டலத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு சென்னை மண்டலத்தில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் முறையே 17.04.2023 மற்றும் 18.04.2023 ஆகிய தினங்களில் ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், பெரியமேடு சென்னை–3ல் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில், இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து 471 ஆண் பயிற்சியாளர்களும், 246 பெண் பயிற்சியாளர்களும் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டியின் துவக்க விழா. 17.04.2023 காலை 10.00 மணிக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது. இவர்களுடன் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in